பிரதம செயலாளர் செயலகம்,வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
**Chief Secretary's Secretariat, Northern Provincial Council**

மாகாணசபை வளாகம், A9 வீதி, கைதடி
පළාත් සභාව සංකීර්ණය, A9 පාර, කයිතඩි
**Provincial Council Complex , A9 Road, Kaithady**

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com

MY NO: NP/09/FRM/R2/CIR - REV/12/2018 15.08.2018

மாகாண நிதிச் சுற்றுநிருப இல:- PF/07/2013(XIV)

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

**<u>வட மாகாண கௌரவ முதலமைச்சர், கௌரவ அவைத் தலைவர், கௌரவ அமைச்சர்கள், கௌரவ எதிர்க்கட்சித் தலைவர், கௌரவ பிரதி அவைத் தலைவர், கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரினதும் கௌரவ அமைச்சர்களின் பிரத்தியேக உத்தியோகத்தர்களினதும் மாதாந்தக் கொடுப்பனவு</u>**

மேற்படி விடயம் தொடர்பான மாகாணநிதிச் சுற்றுநிருப இல: PF/07/2013ன் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

மேற்படி சுற்றுநிருபத்தின் உபபந்தி 4.2ன் கீழ் பின்வரும் உபபிரிவு இணைக்கப்பட்டு சுற்றுநிருபம் திருத்தப்படுகின்றது என்பதை இத்தால் தங்களிற்கு அறியத்தருகின்றேன்.

4.2.1 கௌரவ முதலமைச்சர், கௌரவ அவைத் தலைவர் மற்றும் கௌரவ அமைச்சர்கள் ஆகியோரின் தனிப்பட்ட ஆளணித் தொகுதியைச் சேர்ந்த பிரத்தியேகச் செயலாளர், இணைப்புச் செயலாளர், ஊடகச் செயலாளர் மற்றும் பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் ஆகியோர் தமக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீட்டு வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு அல்லது மாதாந்தப் பிரயாணப்படியைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராவார்.

எனவே, கௌரவ முதலமைச்சர், கௌரவ அவைத் தலைவர் மற்றும் மற்றும் கௌரவ அமைச்சர்களின் தனிப்பட்ட ஆளணித் தொகுதியைச் சேர்ந்த பிரத்தியேகச் செயலாளர், இணைப்புச் செயலாளர், ஊடகச் செயலாளர் மற்றும் பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் ஆகியோர் 5/2016 மற்றும் 5/2016(I)ம் இலக்கங் கொண்ட பொது நிர்வாகச் சுற்றுநிருபங்களில் உள்ளவாறான நிபந்தனைகளைப் பூர்த்திசெய்து மாதாந்தப் பிரயாணப்படியாக ரூபா.50,000/=ஐப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இதுவரையினும் குறித்த அனுகூலத்தினைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் 01.03.2018ம் திகதியிலிருந்து, உரிய நிதி நிர்வாக நடைமுறைகளிற்கு அமைவாக அதனைப் பெற்றுக்கொள்வதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

எனவே, மேற்படி விடயம் தொடர்பான PF/07/2013(XIII) ம் இலக்கமும், 26.03.2018ம் திகதியும் கொண்ட மாகாணநிதிச் சுற்றுநிருபம் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

**அ.பத்திநாதன்**
**பிரதம செயலாளர்**

பிரதிகள்:-
1. கௌரவ ஆளுநரின் செயலாளர் - வ.மா - கௌரவ ஆளுநர் அவர்களுக்கு அறியத்தருவதற்காக
2. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா } தகவலுக்காக
3. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் - வ.மா

பிரதிப் பிரதம செயலாளர்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම්
**DEPUTY CHIEF SECRETARY**

நிர்வாகம் / පරිපාලන / ADMINISTRATION — Tel : 021 320 2571 (Dir) : 021 222 0960 (Gen) Fax : 021 222 0950 e-mail : ppas.np@gmail.com

நிதி / මුදල් / FINANCE — Tel : 021 222 0850 (Dir) : 021 222 0854 (Gen) Fax : 021 222 0853 e-mail : nptreasury@gmail.com

திட்டமிடல் / කුමසම්පාදන / PLANNING — Tel : 021 223 0355 ( : 021 223 0451 ( Fax : 021 223 0354 e-mail : npplan@sltnet

ஆளணிப்பயிற்சி / පිරිස්පුහුණු / PERSONNEL TRAINING — Tel : 021 739 1250 (Dir) : 021 739 1254 (Gen) Fax : 021 739 1257 e-mail : npmdti@gmail.com

பிரதமஉள்ளககணக்காய்வாளர் / ප්‍රධානඅභ්‍යන්තරවිගණක / CHIEF INTERNAL AUDITOR — Tel : 021 222 0796 (Dir) : 021 222 9528 (Gen) Fax : 021 222 0795 e-mail : npcaudit@yahoo.com